செ.வெ.எண்: 203 நாள்: 24.03.2018

திருநெல்வேலி பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்க சுற்று சுவரில் பள்ளி மாணவ மாணவிகள் மது விலக்கு மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு சுவர் ஓவியங்கள் வரைவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப.அவர்கள் பார்வையிட்டார்.

-----------------------------------------------

திருநெல்வேலி பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்க சுற்று சுவரில் பள்ளி மாணவ மாணவிகள் மது விலக்கு மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு சுவர் ஓவியங்கள் வரையும் நிகழ்ச்சி இன்று (24.03.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பாளை தூயே சவேரியார் மேல்நிலை பள்ளி,தூயே யோவான் மேல்நிலை பள்ளி,ஜெயந்திரா மேல்நிலை பள்ளி,சின்மயா மேல்நிலை பள்ளி,காந்திமதிஅம்மாள் மேல்நிலை பள்ளி ஆகிய பள்ளிகளை சேர்ந்த மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். சுவர் விழிப்புணர்வு சித்திரம் வரையும் நிகழ்ச்சியை மாவட்ட வருவாய் அலுவலர் திரு. முத்துராமலிங்கம் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு மதுவின் தீமைகள் குறித்தும்,போதை ஒழிப்பு குறித்தும் விழிப்புணர்வு ஓவியங்களை சுவர்களில் வரைந்தனர். மாணவ மாணவிகள் ஓவியங்கள் வரைவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப.அவர்கள் நேரில் பார்வையிட்டார். மேலும் மாணவ மாணவிகளிடம் விழிப்புணர்வு குறித்து எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி கோட்டாச்சியர் திருமதி.மைதிலி, கலால் உதவி ஆணையர் திரு.பழனி குமார்,முதன்மை கல்வி அலுவலர் திருமதி.முருகானந்தம்,கலால் வட்டாச்சியர் திரு.பால்ராஜ்,கல்வி ஒருங்கினைப்பாளர் திரு.கஜேந்திர பாபு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி